த. நா.ச.பே. எண் : 016 நாள் : 22.03.2018

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (22.3.2018) சட்டப்பேரவையில், எதிர்க்கட்சி துணை தலைவர் திரு.துரைமுருகன் அவர்கள் அத்திக்கடவு – அவிநாசி திட்டம் மற்றும் தமிழ்நாட்டில் சாலை வசதி குறித்து எழுப்பிய கேள்விகளுக்கு விளக்கம் அளித்தார்கள்.**

மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

நிச்சயமாக, உறுதியாக, அத்திக்கடவு – அவிநாசி திட்டம் நிறைவேற்றப்படும் என்பதை உறுதியாக சொல்கிறேன். ஏனென்று சொன்னால், ஏற்கனவே போடப்பட்ட திட்டத்தில், மலையிலிருந்து உபரி தண்ணீரை நாம் கீழே கொண்டு வர வேண்டும். ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தான் உபரி நீர் கிடைக்கிறது. அது, மலையிலிருந்து, மணல் பகுதியிலிருந்து, தண்ணீர் கொண்டு வருகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றபோது, நாம் மத்திய அரசிடமிருந்து அனுமதி பெறவேண்டும். ஆகவே, மாற்று திட்டமாக புதிய திட்டத்தை உருவாக்கி, நான் ஏற்கனவே சொன்னதைப் போல, காலிங்கராயன்பாளையத்திலிருந்து Lift Irrigation மூலமாக தண்ணீர் எடுக்கப்பட்டு இந்த திட்டம் நிறைவேற்றப்படும். அதற்குண்டான விரிவான திட்ட அறிக்கை விரைவில் அறிவிக்கப்பட்டு, அதற்கான டெண்டரும் அறிவிக்கப்பட்டு, உடனடியாக திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதில் சிறிதளவு கூட சந்தேகம் தேவையில்லை. இந்த திட்டம் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் பேரவைத் தலைவர் தொகுதிக்கும் இந்த திட்டம் வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவை தலைவர் அவர்கள் சொன்னது போல, மத்திய அரசிடமோ அல்லது நபார்டு திட்டத்தின் மூலமாகவோ, கடனுதவி பெற்றால் கூட இந்த திட்டம் காலதாமதம் ஆகிவிடுமோ என்று கருதி, இந்த தொகை முழுவதும் மாநில அரசின்

நிதியிலிருந்தே செலவிடப்பட்டு, இந்த திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று மாண்புமிகு சட்டப்பேரவை தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார். அதன் அடிப்படையிலே, மாநில அரசால் முழு நிதியும் ஒதுக்கப்பட்டு இந்த திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படும், என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் சாலையை பற்றி குறிப்பிடுகிறார்கள். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வந்தபிறகு தான், தமிழகத்தில் அதிக அளவு சாலைகளை விரிவுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இரண்டுமுறை மத்திய அமைச்சர் சென்னைக்கு வந்து, இரண்டு முறையும் ஆய்வு செய்து, சுமார் 1 லட்சம் கோடி ரூபாய் தமிழகத்திலே சாலைப் பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அவரே பேட்டி கொடுத்திருக்கிறார். பல சாலைகள் விரிவுபடுத்தப்பட இருக்கின்றன. நீங்கள் சொல்வது போல, உட்கட்டமைப்பு வசதி அதிகமாக இருக்க வேண்டும். அப்போதுதான், தொழிற்சாலைகள் அதிகமாக வரும் என்ற நோக்கத்தில், இன்றைக்கு தமிழகத்திலே உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, சாலைகளை விரிவுபடுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, பசுமை சாலை Greenfield Corridor சேலத்திலிருந்து சென்னை வரை 10,000 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும் என்று மத்திய தரைவழி போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார். எதற்காக சொல்கிறேன் என்றால், இன்றைக்கு தமிழ்நாட்டிலே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலும், போக்குவரத்து நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டு செல்கின்ற காரணத்தினாலும், புதிய தொழிற்சாலைகள் வருகின்ற

காரணத்தினாலும், எளிதாக வாகனங்கள் செல்வதற்காக மத்திய அரசை நாம் அணுகினோம். மத்திய அரசு தேவையான உதவிகளை செய்வதாக அறிவித்து, ஒரே வருடத்தில் இரண்டு முறை மத்திய அமைச்சர் சென்னைக்கு வந்து ஆய்வு மேற்கொண்டு, எந்தெந்த பகுதிகளில் சாலை வசதி விரிவாக்கம் செய்யப்பட வேண்டும், அதற்கு தேவையான உதவிகளை செய்வேன் என்று சொல்லி, அதற்கு தேவையான நிதியும் ஒதுக்கீடு செய்திருக்கிறார் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். மதுரவாயல் பொருத்தவரைக்கும், Alignment எல்லாம் மாற்றியமைக்கப்பட்டு அந்தப் பணியும் விரைந்து செயல்படுத்தப்படும் என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9